**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.**

# இடம் பொருள் கலைஞர் 56





# கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்!

## சென்னையின் தாகம் தீர்த்த சாதனை

1996 அக்டோபர் 16-ஆம் தேதியிட்ட ‘தமிழரசு’ இதழ் வெளியிட்ட கட்டுரைகளில் ஒன்று இப்படி ஆரம்பிக்கிறது:

“சென்னை நகரில், தெருக் குழாய்ச் சண்டைக் காட்சிகள், திரைப்படங்களில்கூடக் காட்டுவதற்கு யோசிக்கப் போகிறார்கள். சென்னை நகருக்கு வருகிற விருந்தினர்கள் இனி, 3 நாட்களுக்கு மேலும் தங்கமுடியும்!”

படிக்கும்போதே விந்தையாக இருக்கிறது அல்லவா? சென்னைக்கு 90 களில் இப்படி ஒரு முகம் இருந்தது என்பது, இன்று வரலாறாகிவிட்ட தகவல். அதற்கு முக்கிய காரணம், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.

### எல்லீஸ் யோசித்த திட்டம்

உலகில் லண்டனுக்கு அடுத்து, மாநகராட்சி அமைந்தது சென்னையில்தான். அந்தச் சென்னை மாநகரத்துக்கென்று நிறையப் பெருமைக்குரிய விஷயங்கள் உண்டு. ஆனால், வெகுகாலம் குடிநீர்ப் பிரச்சினை இருந்து வந்தது.

1881-இல் சென்னை நகரம், சுமார் 5 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்டிருந்தது. அன்று நிலவிய குடிநீர்ப் பிரச்சினைக்கு, சென்னை மாகாணத்தின் பாசனத்துறை நிபுணராக இருந்த கர்னல் டபிள்யூ.எம்.எல்லீஸ் என்பவர், கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குத் திருப்பிவிடத் திட்டமிட்டார். ஆனால், பல்வேறு நிர்வாகச் சிக்கல்களால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

அதன் பிறகு, 1947-1953 காலகட்டத்தில், கிருஷ்ணா-பெண்ணாறு நதித் திட்டம் என்ற பெயரில், ஒரு புதிய திட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ‘கோஸ்லா ஆணையம்’, இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வரலாம் என்று பரிந்துரைத்தது.

### முதல் குரல்... முதல் கடிதம்..!

பிறகு 1961 வாக்கில், ஒன்றிய அரசின் ‘குல்காட்டி ஆணையத்திடம்’, விவசாயிகள் பாசனம் செய்யும் வகையில் 15 டி.எம்.சி. அளவு தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக சென்னைக்கு வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை தமிழ்நாடு அரசு விடுத்தது. அந்தக் கோரிக்கைக்காக ஒன்றிய அரசை தமிழ்நாடு வலியுறுத்திக்கொண்டிருந்த நிலையில், 1963 ஆம் ஆண்டு, ‘மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களும் தலா 5 டி.எம்.சி. அளவுக்குத் தண்ணீரைப் பிரித்து எடுத்துக்கொள்ள முன்வந்துள்ளன’ என்று மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அந்த முயற்சியும் கைவிடப்பட்ட நிலையில், 1969 ஏப்ரல் மாதம், கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட்டது. அந்த நடுவர் மன்றம், கிருஷ்ணா நதி தமிழ்நாட்டில் பாயவில்லை, என்ற ஒரு காரணத்தைச் சொல்லி தமிழ்நாட்டை அந்த நடுவர் மன்றக் குழுவில் சேர்க்கவில்லை. தொடர்ந்து, 1973-ஆம் ஆண்டு, ‘இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாக இருந்த 3 மாநிலங்களும் சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் தர வேண்டும்’ என்று கூறியது. அந்த நேரத்தில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் கொடுக்க வேண்டும்’ என்று அழுத்தம் திருத்தமாக முதல் குரலை எழுப்பியதுடன், இதுதொடர்பாக, முதல் கடிதத்தையும் ஒன்றிய அரசுக்கு எழுதினார்.

அதைத் தொடர்ந்து, 1976 ஆம் ஆண்டுப் பிப்ரவரியில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய முதல்வர்களின் முன்னிலையில் சென்னைக்கு கிருஷ்ணா நீர் வழங்குவது பற்றி அறிவித்தார். அதன் பின்னர் அந்த அறிவிப்பு இரண்டு மாதங்களில் சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்கள் கையொப்பமிட, ஓர் ஒப்பந்தமாக நிறைவேறியது.

### வட்டியும் ‘இன்ட்ரஸ்ட்’டும்

இந்நிலையில், 1983-இல் சென்னையில் ஏற்பட்ட வறட்சியைச் சமாளிக்க, அந்த ஆண்டு ஏப்ரல் 27 அன்று தமிழ்நாடு அரசும், ஆந்திரா அரசும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தின. அதுதான் தமிழ்நாட்டில், ‘கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்’ என்றும், ஆந்திராவில் ’தெலுங்கு கங்கைத் திட்டம்’ என்றும் அழைக்கப்படுகிறது. 1985 வரை, ஆந்திராவுக்கு 47 கோடி ரூபாயை தமிழ்நாடு வழங்கியபோதும், அந்தத் திட்டத்தில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை.

பிறகு 1989-இல் கலைஞர் அரசு அமைந்தவுடன், அன்றைய ஆந்திர முதல்வர் என்.டி.ராமாராவை சந்தித்து, கலைஞர் பேச்சுவார்த்தை நடத்தினார். தொடர்ந்து 1990 ஜூலை வரை, மொத்தம் 60 கோடி ரூபாயை இந்தத் திட்டத்துக்காக ஆந்திர அரசிடம் வழங்கினார்.

அப்படியான ஒரு சந்திப்பின் போது, பத்திரிகையாளர்களிடையே கலைஞர் பேசும்போது, “அவர்கள் (அ.தி.மு.க) 3 ஆண்டு காலமாக எந்தப் பணமும் கொடுக்கவில்லை. இப்போது நாங்கள் 60 கோடி ரூபாய் மொத்தமாகக் கொடுக்கிறோம். 92-93 ஆம் ஆண்டிற்குள், திட்டமானது முடிவடையக் கூடிய விதத்தில் மீதித் தொகையும் தரப்படும். 3 ஆண்டுக்கான பாக்கியை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று என்.டி.ஆர். வற்புறுத்தாததற்குக் காரணம் அவருடைய பெருந்தன்மையாகும்” என்று சொன்னதும், பத்திரிகையாளர் ஒருவர், “பாக்கிப் பணம் ‘இன்ட்ரஸ்ட்’ (வட்டி) உடன் தரப்படுமா?” என்று கேட்க, அதற்கு கலைஞர், “இந்தத் திட்டம் மக்களின் ‘இன்ட்ரஸ்ட்’ (நன்மைக்காக) உடன் செய்யப்படுகிறது” என்றார்.

இந்நிலையில், 1991 கலைஞர் அரசு கலைக்கப்பட, அதற்குப் பிறகு வந்த அரசு எந்த நடவடிக்கையும் இதில் எடுக்கவில்லை. மீண்டும் 1996-இல் கலைஞர் அரசு அமைந்ததும், அன்றைய ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

அதன் பலனாக, 1996 செப்டம்பர் 29 அன்று, ஆந்திரா எல்லையைக் கடந்து, தமிழ்நாட்டின் எல்லையான ஊத்துக்கோட்டை வட்டம், தாமரைக்குப்பம் கிராமத்துக்குக் கிருஷ்ணா நதி வந்தடைந்தது. சென்னையின் தாகம் தணிந்தது!

**...வலம் வருவோம்**



### திராவிட கங்கைத் திட்டம்!

என்.டி.ஆர் உடனான பேச்சுவார்த்தை முடிந்து, அவருடன் கலைஞரும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, “இந்தத் தெலுங்கு கங்கைத் திட்டத்தில் கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்கள் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் இதற்குப் பெயர் தெலுங்கு கங்கைத் திட்டம் என்றிருந்தாலும், ‘திராவிட கங்கைத் திட்டம்’ என்பதே மிகவும் பொருத்தமானதாகும்” என்றார் கலைஞர்.

இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த, 2006-ஆம் ஆண்டு, ‘தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும்’ என்று அன்றைய ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டிக்கு கடிதம் எழுதினார் கலைஞர். ஆனால், கண்டலேறு கால்வாய் பழுது பட்டிருந்தது. எனவே, ஆந்திர மாநிலப் பகுதியில் அதைச் சீரமைக்க, புட்டபர்த்தி சாய்பாபா நிதி உதவி வழங்கினார். அதற்காக 2007-இல் அவருக்குப் பாராட்டு விழா நடத்தினார் கலைஞர்.

### நம்பிக்கை பிறக்கிறது!

ஒவ்வொரு விளிம்புநிலை சமூகங்களுக்கும் பார்த்துப் பார்த்து இட ஒதுக்கீட்டைப் பரவலாக்கியவர் கலைஞர். மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான தனிப்பிரிவை உருவாக்கியது, அருந்ததியருக்கான உள் இட ஒதுக்கீடு, கொங்கு வேளாளர்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைத்தது, கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியது என கலைஞர் படைத்த சாதனைகள் ஏராளம்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு உரிமையை கலைஞர் நிலைநாட்டினார் என்றால், இப்போது கழகத் தலைவரோ அகில இந்தியாவுக்குமான இட ஒதுக்கீடு உரிமைகளை நிலைநாட்டியிருக்கிறார். மருத்துவ உயர்படிப்பில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான அகில இந்திய இட ஒதுக்கீட்டைச் சட்டப் போராட்டத்தால் சாத்தியப்படுத்தியவர் நமது தலைவர். நமது தலைவரால் 2019 நாடாளுமன்றத் தேர்தலிலேயே பிரதமர் வேட்பாளராக அடையாளங் காட்டப்பட்ட ராகுல் காந்தி அவர்கள், தமிழ்நாட்டின் இட ஒதுக்கீடு கொள்கைக்கு வலுசேர்க்கும் வகையில் பேசியிருப்பது நம்பிக்கை தருகிறது.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் - **‘இந்தியா கூட்டணி’** வெற்றிபெற்று ஆட்சி அமைத்தால், சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், இட ஒதுக்கீடு உச்ச வரம்பு 50 சதவிகிதம் என்ற தடை தகர்க்கப்படும் என்றும் ராகுல் காந்தி உறுதியளித்திருக்கிறார். இதன் மூலம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு அவரவர் எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு வருங்காலத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

பெரியார் ‘சுயமரியாதை இயக்கம்’ கண்டு நூறாண்டுகள் நெருங்கிவரும் தருவாயில், ராகுல் காந்தி அளித்திருக்கும் நம்பிக்கை காலப் பொருத்தமானது. இட ஒதுக்கீட்டை அழிக்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் ஆட்சிக்கு வேட்டுவைக்கப் போவதும் கூட..!

### :ப்ளாஷ்பேக்



#### ஓய்வில் சந்திப்பு!

1986-ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் இளைஞர் அணி நிகழ்வுகளில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் கலந்துகொண்டார். பிறகு, பொன்னமராவதி பயணியர் விடுதியில் ஓய்வெடுக்க வந்தார். அவரை சந்திக்க ‘சிறுகதை மன்னர்’ எஸ்.எஸ்.தென்னரசு, எங்களை அழைத்துச் சென்றார். அப்போதைய பொன்னமராவதி ஒன்றிய பெருந் தலைவர் ஆலவயல் சுப்பையா தலைமையில் நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், எனது நண்பர்களுடன் தளபதியை சந்தித்தபோது எடுத்துக் கொண்ட புகைப்படம் இது!



மீனாட்சி சுந்தரம்

**-சே.மீனாட்சி சுந்தரம்,**
**2-வது வார்டு செயலாளர்,**
**பொன்னமராவதி பேரூராட்சி,**
**புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

#### கலைஞரை பேட்டி கண்ட பிராவ்தா!

**1966-ஆம் ஆண்டு கோபாலபுரம் இல்லத்தில் வைத்து, கலைஞர் கொடுத்த ஒரு பேட்டி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. சோவியத் ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ ஏடாக வெளிவந்த ‘பிராவ்தா’ ஆசிரியர் குழுவினர் நேரில் வந்து கலைஞரிடம் பேட்டி கண்டனர். சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் நீண்ட அப்பேட்டியில் சமதர்மம், மொழிக் கொள்கை குறித்தெல்லாம் சுவாரசியமான பதில்களை அளித்தார் கலைஞர். வரலாற்றில் தனித்துவமான நேர்காணல் அது.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 382




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131